## முதலமைச்சரின் திறமையான தலைமையின்கீழ்

# தமிழ்நாடு தொழில்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக உருவெடுத்து வருகிறது!

## ஜே.கே. ஃபென்னர் நிறுவனத்தின் 70வது ஆண்டு விழாவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 4–**
**ஜே.கே. ஃபென்னர் நிறுவனத்தின் 70வது ஆண்டு விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் முதலமைச்சரின் திறமையான தலைமையின் கீழ் தமிழ்நாடு தொழில் மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக உருவெடுத்து வருகிறது என்று பெருமையுடன் தெரிவித்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

ஜே.கே.ஃபென்னர் நிறுவனத்தின் 70-வது ஆண்டு விழாவில் பங்கேற்பதில் பெருமை கொள்கிறேன்.

வழக்கமாக தனியார் நிகழ்வுகளில் மிக அரிதாகவே பங்கேற்பேன். ஆனால், ஜே.கே.ஃபென்னர் நிறுவனம் நம் சமூகத்திற்கு ஆற்றியுள்ள பெரும் பங்கினைக் கருத்தில் கொண்டே இவ்விழாவில் பங்கேற்கிறேன்.

ஒரு நிறுவனத்தை 10 ஆண்டு காலம் நடத்துவதே மிக பெரும் காரியம், ஆனால், ஜே.கே.ஃபென்னர் நிறுவனம், 70 ஆண்டு காலம் தொடர்ந்து நிலைத்து வருவது மிகப் பெரிய காரியம். இந்த நேரத்தில் போற்றத்தக்க இச்சாதனைக்காக என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜே.கே.ஃபென்னர் இந்தியா நிறுவனத்தின் தலைவர் நாகராஜு ஸ்ரீராமா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தபோது, 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள், இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு முன்னெடுப்பின் மூலம் பயனடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.






### விளிம்புநிலை விளையாட்டு வீரர்கள்

விளிம்பு நிலையிலிருந்து வரும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு, அண்மையில் 50 லட்சம் ரூபாய் வழங்கி இருப்பதற்கு இந்த நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுக்கும் ஜே.கே. ஃபென்னர் நிறுவனத்துக்கும் நீண்ட நெடிய தொடர்புள்ளது. 2001-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த போது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு, ஸ்ரீபெரும்புதூரில் ரூ. 1,300 கோடி முதலீட்டில் ஒரு டயர் தொழிற்சாலையை அமைத்தது. இன்றைக்கு இந்நிறுவனத்தின் இரண்டு தொழிற்சாலைகள் முழு செயல்பாட்டில் கிட்டத்தட்ட 1,000-க்கும் அதிகமான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி வருகிறது.

### திறன் மேம்பாடு

மேலும் இந்நிறுவனம் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு, திறன் பயிற்சிகளை வழங்கவும் நம்முடன் இணைந்து பணியாற்றி வருகிறது. தையல் பயிற்சி, சிறுதானிய பேக்கிங் பயிற்சி, ஒப்பனைத் திறன் பயிற்சி ஆகியவற்றை வழங்கி, 12 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்களின் திறன்களை, இதுவரை மேம்படுத்தியுள்ளது. லாப நோக்கங்களுக்கு மட்டுமின்றி, மக்கள் மேம்படவும் பணியாற்றி வருவதற்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை 3,500 நேரடி வேலை வாய்ப்புகளையும், மேலும் அவர்களின் சி.எஸ்.ஆர் (CSR) திட்டங்கள் மூலம் சுமார் 5,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உதவி இருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

### மருத்துவ உதவி

கோவிட்-19 தொற்றுநோயின் கடினமான நாட்களில், இந்நிறுவனம் தமிழ்நாட்டு மக்களுடன் நின்று, மருத்துவ உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்கள், உணவு மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கியது.

இதுவரை 900 கண்புரை அறுவை சிகிச்சைகளுக்கு ஆதரவளித்துள்ளனர் மற்றும் 2024-ஆம் ஆண்டின் பெருவெள்ளத்தின் போது விழுப்புரம் மாவட்டத்தில் சுமார் 1,000 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிகளை வழங்கியுள்ளனர். மிக முக்கியமாக, இந்நிறுவனம் மதுரை மாவட்டத்திலுள்ள பொம்மம்பட்டி கிராமத்தைத் தத்தெடுத்து, அதன் நீர் பற்றாக்குறைப் பிரச்சினைகளை தீர்க்கத் உதவியுள்ளது மற்றும் மேலூர் தாலுகாவில் மூன்று குளங்களைப் புனரமைத்துள்ளது.

### வளர்ச்சி விகிதம்

ஜே.கே ஃபென்னர் இந்தியா லிமிடெட் (JK Fenner India Limited) போன்ற நிறுவனங்களின் பங்களிப்புகளால், தமிழ்நாடு ஒரு வலுவான தொழில் துறை அடித்தளத்தை உருவாக்கியுள்ளது. இன்று, நமது மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் இந்தியாவிலேயே அதிகமாக 11.19 சதவிகிதத்தை எட்டியுள்ளது. நமது முதலமைச்சரின் திறமையான தலைமையின் கீழ், தமிழ்நாடு, நம் நாட்டின் மிகவும் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக உருவெடுத்து வருகிறது. இன்று கூட, நமது முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஐரோப்பாவில் உள்ளார்.

இந்த நிகழ்வில் கூடியிருக்கும் பல்வேறு தொழில்களின் நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள், தமிழ்நாட்டில் உங்கள் தொழில்களை நிறுவவும் விரிவாக்கவும் வேண்டுமென்று உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

### புரட்சிகரமான பார்வை

நமது முதலமைச்சர் 2030-ஆம் ஆண்டளவில் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவாக்க வேண்டும் என்ற புரட்சிகரமான பார்வையுடன் திட்டங்களை வடிவமைத்துள்ளார். எங்கள் திராவிட மாடல் அரசு, உங்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் உறுதியாக வழங்கும்.

மீண்டும் ஒரு முறை, ஜே.கே. ஃபென்னர் இந்தியா நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனம் தொடர்ந்து பல உச்சங்களை அடையவும், நிலையான வெற்றியைப் பெறவும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

ஜே.கே.ஃபென்னர் இந்தியா லிமிடெட்டின் தலைவர் டாக்டர்.ரகுபதி சிங்கானியா, நாகராஜு ஸ்ரீராமா, சுனில் கவுல், சோமசுந்தரம் மற்றும் பஞ்சபகேசன், எம்.எஸ்.ஜனார்த்தன் மற்றும் ஜே.கே.பென்னர் நிறுவன ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட
## முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு
# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



செய்யார் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



தாளவாடி மேற்கு ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



வாலாஜா கிழக்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



சிவகங்கை தெற்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



சாயல்குடி பேரூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.



திண்டுக்கல் பகுதி-5,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



உப்பிடமங்கலம் பேரூர்,
கரூர் மாவட்டம்.



மோப்பிரிபாளையம் பேரூர்,
கோவை தெற்கு மாவட்டம்.